O.S. No: 87/2015
பெயர்:சீத்தாராமன்
**பி.சா. 2**
14-08-2025
**4,13,14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் குடியிருப்பது கங்காதரபுரம். அந்த ஊர் அளவந்தியபுரம் ஊராட்சியை சார்ந்தது என்றால் ஆமாம். அளவந்தியபுரம் ஊராட்சிக்கு சாமிநாதனின் அப்பா நாகராஜபடையாச்சி ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் ஆமாம். அவ்வாறு இரண்டு முறை ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார். நாகராஜபடையாச்சி குடும்பத்தில் அவருடைய மகன் சாமிநாதன் மருமகள் சந்திரலேகா ஆகியோரும் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார்கள். சந்திரலேகாவை எதிர்த்து என் உறவினர் தேர்தலில் நின்றாரா என்றால் இல்லை. நாகராஜபடையாச்சிக்கு இரண்டு மனைவி என்றால் ஆமாம். நாகராஜபடையாச்சி சினிமா கொட்டாய் நடத்தினாரா என்றால் அவர் டூரிங் கொட்டாய் பங்குதாரராக நடத்தினார். கள்ளுக்கடையும் நடத்தினார். ரைஸ் மில் நடத்தினார். டிராவல்ஸ் நடத்தினாரா என்று தெரியாது. பிளாஸ்டிக் கம்பெனி நடத்தினாரா என்று தெரியாது. மேற்கண்ட தொழில்களை அவர் தனிப்பட்ட முறையில் செய்துவந்தாரா என்றால் மூத்த மகன் சப்போட்டில் செய்துவந்தார். நாகராஜன் இறக்கும் போது அவருக்கு வயது 90. நாகராஜன் தனிப்பட்ட முறையில் நிறைய சொத்துக்கள் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம். நான் நாகராஜனுக்கு சொத்துக்களை விற்றிருக்கிறேன் என்றால் ஆமாம். 17/02/1982 இல் அவ்வாறு விற்றேன். 17/02/1982 இல் நான் முழுத்தொகையும் பெற்றக்கொண்டு, சொத்தை சுவாதீனம் ஒப்படைத்து விட்டேன். அவர் ரிஜிஸ்டர் செய்துக்கொள்ளவில்லை. அது 122/1பி மற்றும் 122 ஆகும். நான் அவ்வாறு கிரைய ஒப்பந்தம் செய்ததாக சொல்வது பி.சா.ஆ. 9 என்றால் சரி. இந்த கிரைய ஒப்பந்தத்தில் நான் மட்டும் தான் கையெழுத்து செய்திருக்கிறேன். நாகராஜபடையாச்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் இது முழு பணத்தை பெற்றுக்கொண்டதற்காக

ஸ்டாம்ப் பேப்பரில் கையெழுத்து செய்திருக்கிறேன் . பி.சா.ஆ. 9 கிரைய ஒப்பந்தம் தான். இந்த கிரைய ஒப்பந்தத்தின் மொத்த விஸ்தீர்ணம் 1 ஏக்கர் 17 செண்ட் ஆகும். இந்த சொத்து எனக்கு பூர்வீக பாத்தியப்பட்டு , பாகத்தில் கிடைத்தது . பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரம் உள்ளது . 06/07/2005 இல் நான் நாகராஜ படையாச்சிக்கு வா .சா.ஆ. 2 மூலமாக கிரையம் செய்து கொடுத்திருக்கிறேன் என்றால் ஆமாம். அதில் 122/1 பி, 122/2 ஆகியவற்றை கிரையம் செய்து கொடுத்திருக்கிறேன் என்றால் சரி. இந்த கிரைய பத்திரத்தில், பி.சா.ஆ.9 கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரையம் செய்து கொடுப்பதாக கண்டு எழுதப்படவில்லை என்றால் சரி . விஜயராஜுக்கு 27/06/2008 இல் கிரையம் செய்து கொடுத்தேன். அவருக்கு கிரையம் செய்து கொடுத்த பத்திரம் வா .சா.ஆ. 21 என்றால் சரி. அதில் 122/1 பி மற்றும் 122 சர்வே எண்ணில் 29.5 ஏர்ஸ் விற்றிருக்கிறேன். அதிலுள்ள வாசகங்களை நாகராஜபடையாச்சி தயார் செய்து எடுத்துவந்தார். நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். இந்த கிரைய ஆவணத்தில் 1982 கிரைய ஒப்பந்தம் கண்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா .சா.ஆ. 21 இல் கிரைய தொகை ரூபாய் 30 ஆயிரம் நாளது தேதியில் என் வசம் பற்றாகிவிட்டது என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரி . பி.சா.ஆ. 9 இல் நாகராஜபடையாச்சி பணம் கொடுத்ததாக கண்டு எழுதப்பட்டுள்ளது. பி.சா.ஆ.8 கடிதம் நான் தான் எழுதினேன். இந்த கடிதம் மனோகரன் என்கின்ற சாமிநாதனுக்கு நான் தான் எழுதினேன் . சொத்தில் 6 செண்ட் விடுபட்டு போய்விட்டதற்காக வரி கேட்டு வந்ததனால் அது தொடர்பாக நான் சாமிநாதனுக்கு கடிதம் எழுதினேன். இந்த கடிதத்தில் யாரிடம் ஒப்பந்தம் போட்டதாக எழுதியுள்ளேன் என்றால் சாமிநாதன் என்கின்ற மனோரகனிடமிருந்து 122/1 பி-க்கு குழி 70 ரூபாய் வீதம் நான் பணம் வாங்கினேன். நான் 1982 இல் நாகராஜபடையாச்சியிடம் பணம் வாங்கிவிட்டு அதே சொத்திற்கு சாமிநாதனிடமும் பணம் வாங்கினேனா

என்றால் இல்லை. இந்த கடிதம் 02/11/1983 இல் எழுதினேன். இந்த கடிதம் எழுதிய போது நாகராஜ படையாச்சி உயிருடன் இருந்தார் . 1982 இல் நாகராஜபடையாச்சியிடம் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் விடுப்பட்ட சொத்திற்கு தான் நான் இந்த கடிதம் எழுதியுள்ளேன் . இந்த 6 செண்ட் விட்டு போனதை நான் சாசனம் கொடுக்கவில்லை . நான் இந்த கடிதத்தில் கிரைய ஒப்பந்தம் செல்லாது என்று எழுதிவிட்டு , அதன் பிறகு நீண்ட காலம் கழித்து தான் அதே சொத்தை கிரையம் செய்து கொடுத்திருக்கிறேன் என்றால் ஆமாம் . மனோகரன் என்கின்ற சாமிநாதன் அலவந்திபுரம் , மேல குடியான தெருவில் வசிக்கிறார் . 1982 இல் பி.சா.ஆ.9 கிரைய ஒப்பந்தத்திற்க ஸ்டாம்ப் சாமிநாதன் தான் வாங்கிவந்தார். அதில் மனோகரன் திருவலஞ்சுழி என்று தான் உள்ளது என்றால் சரி . திருவலஞ்சுழியில் எந்த முகவரியில் மனோகரன் வசிக்கிறார் என்ற தெரியாது . இந்த முத்திரை தாள் இரண்டுமே திருவலஞ்சுழி மனோகரன் வாங்கியதாக தான் உள்ளது என்றால் ஆமாம் . இந்த முத்திரை தாள் இரண்டுமே திருவையாறு முத்திரை தாள் விற்பனையாளரிடம் வாங்கியதாக உள்ளது என்றால் சரி . நாகராஜனுக்கு இரண்டு மனைவிகள் மூலமாக பிறந்த குழந்தைகளில் முதல் மனைவிக்கு பிறந்த குழந்தைகளுக்கும் இரண்டாவது மனைவியின் மூலமாக பிறந்த குழந்தைகளுக்கும் இடையே வருத்தம் உள்ளது என்றால் ஆமாம் . நாகராஜபடையாச்சியே தனிப்பட்ட முறையில் சம்பாதித்து நிறைய சொத்துக்களை வாங்கினார் என்றால் ஆமாம் . நான் கிரையம் செய்து கொடுத்த வா .சா.ஆ.2, வா.சா.ஆ. 21 இன் மூலம் முறைப்படி பணம் கிரைய தொகையை பெற்றுக்கொண்டு சாமிநாதன் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**6, 7, 10, 11 பிரதிவாதிகள் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.**

**18, 19, 20 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு பல வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல . மனோகரன் என்கின்ற சாமிநாதனை 40, 50 வருடங்களாக தெரியும். நாங்கள் ஒரே ஊர். பக்கத்து பக்கத்து தெருவில் குடியிருக்கிறோம். நாங்கள் ஒன்றாக படிக்கவில்லை . ஸ்கூலில் சாமிநாதன் என்று தான் கூப்பிடுவோம் . அவருடைய எந்த ஆவணங்களில் ஆவாது சாமிநாதன் என்கின்ற மனோகரன் என்று இருப்பதை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை . எனக்கும் அவருக்கும் ஸ்கூலில் சம்மந்தம் இல்லை என்பதால் நான் எந்த ஆவணத்தையும் பார்க்கவில்லை. சம்மனில் என்.சாமிநாதன் என்று தான் போடப்பட்டுள்ளது. சாமிநாதன் என்கின்ற மனோகரன் என்று இல்லை . வா.சா.ஆ. 2 மற்றும் வா.சா.ஆ. 21 இல் கிரைய ஒப்பந்தம் அடிப்படையில் கிரையம் செய்து கொடுப்பதாக கண்டு எழுதப்படவில்லை என்றால் சரி . நான் சாமிநாதனிடம் ஆதாயம் பெற்றுக்கொண்டு ஆவணங்களில் இல்லாததை பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . சாமிநாதனிடம் பிரதி பலன் பெற்றுக்கொண்டு அவர் பெயர் சாமிநாதன் என்கின்ற மனோகரன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.